# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2073 - 2018 මැයි මස 25 වැනි සිකුරාදා - 2018.05.25

*2073 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 914 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 923 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


*__கவனிக்க.__- குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்) சட்டமூலம் 2018, மே 18 ஆந் திகதிய இலங்கைச் சனைநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, யூன் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## பண்டுவஸ்நுவர பிரதேச சபை

வடமேல் மாகாண அரச சேவையில் பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகள் தொடர்பில் பின்வரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள பண்டுவஸ்நுவர பிரதேச சபை நியாயாதிக்கத்தினுள் நிரந்தர பதிவை உடையவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடமாகியுள்ள பதவிகளின் எண்ணிக்கை | பதவியணி | சம்பள அளவுத் திட்டம் | இணைத்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகைமை, ஏனைய தகைமைகள் மற்றும் அனுபவம் |
|---|---|---|---|---|---|
| 01 | அலுவலக உதவியாளர் | 01 | (PL 1 - 2016) ஆரம்ப கைப்பணி யாளர் அல்லாத பதவியணி தரம் III | பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 இன் (PL1 - 2016) ஏற்ப அளவிக்கேற்ப ரூபா. 24,250 - 250X10 -270X10 - 300X10 - 330X12 - ரூ. 36,410 எனும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம் இப்பதவிக்கு உரித்தாகும். சேவையில் நியமிப்புச் செய்யும் திகதிக்கு குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை ii இன் PL 1 - 2016 சம்பளத் தொகுதியின் ஆரம்ப கூட்டத்தில் வைக்கப்படும். | வெளிவாரி விண்ணப்பதாரிகள் : (அ) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்புக்குரிய பாடங்களைத் தவிர்த்து) உள்வாரியான விண்ணப்ப தாரிகள் : (ஆ) தற்போது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் சேவை புரியும் விண்ணப்பதாரிகள் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலையொன்றில் வருடம் 9 (வகுப்பு 8) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02 | சமூக மண்டபப் பொறுப்பாளர் | 01 | | | |
| 03 | வாசிகசாலை உதவியாளர் | 01 | | | |
| 04 | வேலை/களத் தொழிலாளர் | 01 | | | |

1. சேர்த்துக்கொள்ளல் தொடர்பான பொது விதிகள் :

   1.1 சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த உடல் நலம் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும்.

   1.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல).

   1.3 பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லையினுள் மூன்று வருடத்திற்கு குறையாத நிரந்தர பதிவைப் பெற்றவராய் இருத்தல் வேண்டும். (பதிவு தொடர்பில் குறித்த பிரிவின் கிராம அலுவலர் அவர்களால் விநியோகிக்கப்படும் சான்றிதழ் பிரதேச செயலாளர் அவர்களால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2. சேவையில் இணைத்துக் கொள்ளல் தொடர்பான நிபந்தனைகள் :

   2.1 இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்குரித்தான ஓய்வூதிய முறைமை தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீமானத்திற்கு நீங்கள் உட்படல் வேண்டும்.

   2.2 நியமனம் 3 வருட கால தகுதி காண் காலத்தைக் கொண்டிருக்கும். தகுதி காண் காலத்தினுள் தமது கடமை, நடத்தை மற்றும் வரவு என்பவற்றை திருப்தியான விதத்தில் பேணி இருப்பதுடன் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் தகுதிகாண் காலத்தின் இறுதியின் சேவையில்/பதவியில் நிரந்தரமாக்கப்படும்.

2.3 1/2014 எனும் இலக்கத்தையுடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ப 2007.07.01 ஆந் திகதி முதல் மாகாண சபை அரச சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படும் அனைத்து அலுவலர்களும் சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைந்து கொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றுமொரு அரச கரும மொழியில் தேர்ச்சிபெறல் வேண்டும்.

3. ஆட்சேர்ப்பு முறை

3.1 இணைத்துக்கொள்ள தேவையான ஆகக் குறைந்த தகைமைகளை பெற்றுள்ள விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். தகைமைகளை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும். குறித்த நேர்முகப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களையும் அவற்றின் நிழற் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி.
(ii) கல்விச் சான்றிதழின் மூலப் பிரதிகள்.
(iii) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்.
(v) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள்.
(vi) சேவைச் சான்றிதழ்.
(vii) வேறு தகுதியை சுட்டிக்காட்டும் சான்றிதழ்கள்.

3.2 நேர்முகப் பரீட்சைக்கு வரும் விண்ணப்பதாரிகளில் கூடுதலான தகைமையை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு பதவி வெற்றிடம் தொடர்பில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

4. விண்ணப்பிக்கும் முறை :

4.1 அறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகப்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2018.06.29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "செயலாளர், பண்டுவஸ்நுவர பிரதேச சபை, ஹெட்டிபொல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

4.3 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்திய பிரமான ஆணையாளர்/சட்டத்தரணி ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

4.4 தற்போது அரச சேவையில், மாகாண அரச சேவையில் இருக்கும் அலுவலர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

4.5 பூரணப்படுத்தப்படாத அல்லது குறித்த திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல்கள் இன்றி நிராகரிக்கப்படும்.

சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் செல்லுபடியாகும் திகதி என்பன பற்றி பண்டுவஸ்நுவர பிரதேச சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படுகின்ற கால எல்லையினுள் ஆட்சேர்த்துக்கொள்ளலை தாமதப்படுத்தும் அல்லது இந்த அறிவித்தலை இரத்துச்செய்யும் அல்லது அதில் திருத்தம் செய்யும் அதிகாரம் பண்டுவஸ்நுவர பிரதேச சபை செயலாளருக்குண்டு.

எச். ஏ. ஜி. நிஷ்ஷங்க,
செயலாளர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பண்டுவஸ்நுவர,
2018, மே 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண அரச சேவையில் பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் ஆரம்ப கைப்பணியாளர் அல்லாத பதவியணி தரம் III இன் ...................................................... பதவிக்கு இணைத்துக்கொள்ளல்.**

1. முழுப் பெயர் :...............................................................................................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :...................................................................................

3. நிரந்தர முகவரி :..........................................................................................................

   ...............................................................................................................................

4. தொலைபேசி இலக்கம் : .................................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு ............................ மாதம் .................... திகதி ..............

6. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுக்கு வயது : வருடங்கள் .................... மாதங்கள் .................... நாட்கள் ..............

7. கல்வித் தகைமைகள் : ..................................................................................................

   இறுதியாக சித்தியடைந்த வகுப்பு : ..........................................................

   க. பொ. த. (சாதாரண தரம்)

   பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : ............................... பரீட்சைச் சுட்டெண் : .............................................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

8. நீங்கள் எப்போதாவது அல்லது ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? : ..........................................................

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
   இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் சரியானவையெனவும் உண்மையானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான்

தெரிவு செய்யப்பட முன் தெரிய வந்தால் நான் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் தகுதியை இழப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்ட ஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என நானறிவேன்.

………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

……………………………………
திகதி

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்பவர் எனக்கு நன்கு தெரியும் என்றும் அவர் ...................................... ஆம் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

முழுப் பெயர் : ........................................................................................................................

பதவி:……………………………………………………………………………………………………………

முகவரி:……………………………………………………………………………………………………………

திகதி : .............................................

(பதவி முத்திரை பதித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

11. அரச சேவையில்/மாகாண அரச சேவையில் இருக்கும் ஊழியராயின் திணைக்களத்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இவ் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்பவர் தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் நிரந்தர/அமைய/தற்காலிக உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் என்பதையும் அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுதலை செய்ய முடியும்/முடியாது என்பதையும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………
திணைக்களத்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

முழுப் பெயர் : ........................................................................................................................

பதவி:……………………………………………………………………………………………………………

முகவரி:……………………………………………………………………………………………………………

திகதி : .............................................

(பதவி முத்திரை பதித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

5 - 567

## பாத்த தும்பற பிரதேச சபை

## மத்திய மாகாண அரச சேவையின் பாத்ததும்பற பிரதேச சபையினது பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

பாத்த தும்பற பிரதேச சபையில் தற்போது நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட பாத்த தும்பற பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வாகன ஓட்டுநர் தரம் III | 01 | PL 03/2016 III ரூபா. 25,790 - 10x270 -10x300 - 10x330 -12x350 - ரூ. 38,990 (பொ.நி.சு. 3/ 2016 இன் அட்டவணை II இற்கமைய சம்பளம் வழங்கப்படும்.) | இரு தடவைக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் ஐந்து பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு பதவிக்குமென உரிய பிரிவுக்கான மோட்டார் வாகனத்தைச் செலுத்தும் அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல். (மோட்டார் கோச்சு கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்) இதற்கு மேலதிகமாக இயந்திரம் இயக்குபவர் பதவிக்கென அரசு அங்கீகரித்த தாபனமொன்றிலிருந்து பெறப்பட்ட தேசிய தொழிற் தகைமை 4 ஆவது மட்டம் (NVQ 4) பயிற்சிச் சான்றிதழ்.<br><br>இயந்திரம் இயக்குவதற்கான பயிற்சிச் சான்றிதழ்.<br><br>(பெக்கோ லோடர் மற்றும் திராக்டர் இயந்திரத்தை இயக்குவதற்குரிய இயலுமை பெற்றிருப்போர் மீது முன்னுரிமை காட்டப்படும்) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் மற்றும் பகல் இரவுக் காலங்களில் சேவையில் ஈடுபடுவதற்கான உடற் தகைமையைக் கொண்டுள்ளவராக இருத்தல். அத்துடன்<br><br>குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பளத் அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 02 | நூலக உதவியாளர் தரம் III | 01 | 03/2016 PL1 ரூபா. 24,250 - 10X250 - 10X270 - 10X300 -12X330 - ரூ. 36,410 | இரு தடவைக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் ஐந்து பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 03 | நீர் விநியோகத் தொழிலாளர் தரம் III | 01 | 03/2016 PL1 ரூபா. 24,250 - 10X250 - 10X270 - 10X300 -12X330 - ரூ. 36,410 | அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தி பெற்று இருத்தல் வேண்டும். |
| 04 | சுகாதாரத் தொழிலாளர் தரம் III | 01 | 03/2016 PL1 ரூபா. 24,250 - 10X250 - 10X270 - 10X300 -12X330 - ரூ. 36,410 | அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தி பெற்று இருத்தல் வேண்டும். |
| 05 | வீதித் தொழிலாளர் தரம் III | 02 | 03/2016 PL1 ரூபா. 24,250 - 10X250 - 10X270 - 10X300 -12X330 - ரூ. 36,410 | அரசாங்கப் பாடசாலையொன்றில் தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தி பெற்று இருத்தல் வேண்டும். |

**2. ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரிகள் வம்சாவளியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராக 03 வருடகால நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (வதிவிடச் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்)
3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே பாத்த தும்பர பிரதேச சபையில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.
4. மேற்காட்டியுள்ள ஒவ்வொரு பதவிக்குமான குறைந்தளவு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப் பட்டுத் தகைமைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர் குறித்த பெறுபேறுகளின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.
6. வாகன ஓட்டுநர் பதவிக்கென மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சைக்கும் அவரால் முன்வைக்கப்படும் வீதிச் சட்டங்கள் பற்றிய வாய்மொழித் தேர்வுக்கும் தோற்றுதல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் தருணத்தில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், இந்த அறிவித்தலில் திருத்தங்களை மேற்கொள்ளும் அதிகாரம் பாத்த தும்பர பிரதேச சபைக்கு உண்டு.
8. ஏற்கனவே பாத்த தும்பற பிரதேச சபையில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**3. பொதுவான நிபந்தனைகள் :**

1. இந்த வெற்றிடங்கள் தொடர்பில் உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் முன்வராத பட்சத்தில் நிருவாகப் பிரதேசத்துக்கு வெளியிலிருந்து வரும் விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளப்படுவர்.

**4. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

1. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதிய உரித்துடையவை.

2. உரிய வகையில் அநாதைகள்/விதவைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்படுவோர் மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவர். ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டோர் 01 வருட காலத்துக்குப் பகுதி தகுதிகாண் காலத்துக்கு உட்படும் வண்ணம் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

4. அரச கரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காகவும் விசேடமாக அரசகரும மொழிகள் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் தற்போது ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் ஆக்கப்படவுள்ள ஏற்பாடுகளுக்கமையச் செயற்படுதல் வேண்டும்.

5. ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைத் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், மத்திய மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், மத்திய மாகாண சபை அல்லது மாகாண அரச சேவைகள் ஆணையகம் அல்லது பாத்த தும்பற பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு அனைத்துப் பணியாளர்களும் உட்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். நியமனம் கிடைத்த ஒரு மாத காலத்துக்குள் தகுதி பெற்ற மருத்துவர் ஒருவரால் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையின் போது தேகாரோக்கியம் பொருத்தமற்றது எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

7. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

8. அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது.

**5. விண்ணப்பிக்க வேண்டிய முறை**

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக 8.27" x 11.29" அளவான (A4) தாளின் இரு புறங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.06.09 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், பாத்த தும்பர, பிரதேச சபை, பிட்டியேகெதர, வத்தேகம" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தபாலில் அற்றுப்போகும் அல்லது தவறாக முகவரியிடப்பட்டுத் திருப்பியனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்பட மாட்டாது. உரிய திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்:-

(i) பிறப்புச் சான்றிதழ்
(ii) தேசிய அடையாள அட்டையின்/கடவுச்சீட்டின் பிரதி
(iii) கல்விச் சான்றிதழ்கள்
(iv) பிரதேச செயலாளரால் கையொப்பமிடப்பட்ட தமது நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்திய தமது பிரிவுக் கிராம அலுவலர் வழங்கிய வதிவிடச் சான்றிதழ்
(v) தொழிற் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள்.
(vi) சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
(vii) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்

செயலாளர்,
பாத்த தும்பற பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்த தும்பற.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மத்திய மாகாண அரச சேவையில் பாத்ததும்பர பிரதேச சபையில்**
**………………………………………………பதவி**

1. விண்ணப்பதாரியின் பெயர்(முதலெழுத்தச்சளுடன்) :……………………………………………………………………

முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :……………………………………………………………………

2. நிரந்தர முகவரி:………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………

3. பிறந்த திகதி : ஆண்டு ………………………… மாதம் ………………… திகதி ……………

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுக்கு வயது : வருடங்கள் ………………… மாதங்கள் ………………… நாட்கள் ……………

5. விவாக நிலை : விவாகமானவர்/தனித்தவர் …………………………

6. இனம்:…………………………

7. இலங்கைப் பிரசை பிறப்பினாலா அல்லது பதிவினாலா :…………………………

8. கல்வித் தகைமைகள் :……………………………………………………………………………………

க. பொ. த. (சாதாரண தரம்)

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :……………………………பரீட்சைச் சுட்டெண் :……………………………………………

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

9. (i) ஏனைய தகைமைகள் :……………………………………………………………………………………

(ii) தொழிற் தகைமைகள் :……………………………………………………………………………………

(iii) சேவை அனுபவம்:……………………………………………………………………………………

(iv) அனைத்து கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

*10.* ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? : ............................................

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் சரியானவையெனவும் உண்மையானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவு செய்யப்பட முன் தெரிய வந்தால் நான் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் தகுதியை இழப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்ட ஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என நானறிவேன்.

……………………………………….
விண்ணப்பதாரியின் கையொப்பம்

……………………………………
திகதி

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

(தற்போது அரச சேவையிலுள்ளோருக்கு மாத்திரம்)

திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் /திணைக்களத்தில் நிரந்தர/சமயோசித/பதிலீட்டு/ஒப்பந்த அடிப்படையில் ............................................... ஆகப் பணியாற்றுகிறார். இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

……………………………………….
திணைக்களத்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

முழுப் பெயர் :......................................................................................................................

பதவி:.....................................................................................................................................

முகவரி:..................................................................................................................................

திகதி : ............................................

(பதவி முத்திரை பதித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

5 - 679

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## காலி மாநகர சபை

*மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அத்தியாயம்) 71(1) பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*தேசிய அரச சபையின் 1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்தைக் கொண்ட பாதைகளுக்கு பெயரிடல் மற்றும் நினைவுச் சிலைகளை அமைப்பதை நிருவகிப்பதற்குமான சட்டத்தின் மூன்றாவது பிரிவின் மூலம் திருத்தப்பட்ட மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அத்தியாயம்) 71(1) பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு, தென் மாகாண கௌரவ முதலமைச்சரினதும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகளுக்கு எதிரே காட்டப்பட்டுள்ளபடி, பெயரிடப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

வாசனா பீ. குணரத்ன,
நகராட்சி ஆணையாளர் மற்றும்
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்,
காலி மாநகர சபை.

### அட்டவணை

| தொ. இல. | பாதையின் பெயர் | பாதை ஆரம்பம் | பாதையின் முடிவு | பாதைக்குப் புதிதாக இடப்பட்டுள்ள பெயர் |
|---|---|---|---|---|
| 01. | ஹெவ்லொக் பெதெஸ | காமினீ மாவத்தை | புஞ்ஞாஸார மாவத்தை | பேராசிரியர் பந்துசேன, குணசேக்கர மாவத்தை, ஹெவ்லொக் பெதெஸ |
| 02. | ஸ்ரீ சுமங்கல திலக்காராம விகாரை பாதை | தேவசுரேந்திர பாதை | விஸ்கம் பாதை | வணக்கத்துக்குரிய கொக்கல ஸங்கதிலக்க , நாஹிமி மாவத்தை |
| 03. | காமினீ மாவத்தை | வக்வெல்ல பாதை | ஹெவ்லொக் பாதை | கலாநிதி மாம்பே விமலகித்தி, நாஹிமி மாவத்தை |
| 04. | மஹமோதர வத்தை பாதை | காலி கொழும்பு வீதி | மஹமோதர ஆற்றுக்கு அருகாமையில் | ஸந்தரெஸ் மாவத்தை. |
| 05. | மின்ரோ ரெஸ்ட் ஹோட்டலுக்கு அருகாமையில் சந்திக்கின்ற முதலாவது தார் இடப்பட்ட பாதை | மின்ரோ ரெஸ்ட்டுக்கு அருகாமையில் தர்மபால மாவத்தை | வரி மதிப்பு இல. 17/4, வீடு அமைந்த இடம் | அருண பெதெஸ |
| 06. | மின்ரோ ரெஸ்ட் ஹோட்டலுக்கு அடுத்த பக்கத்தில் அமைந்துள்ள தார் இடப்பட்ட பாதை | மின்ரோ ரெஸ்ட்டுக்கு அருகாமையில் தர்மபால மாவத்தை | மொரகொட ஓடை, பாதையும் குடா கெதர வத்தை பாதையும் சேரும் முச்சந்தி | ஹரித பெதெஸ |

5 - 609